ISSN No.: 2582-5275

# மக்கள் விசாரணை

## MAKKAL VISARANAI Tamil Monthly

தமிழ் மாத இதழ்

ANTI-CORRUPTION AWARENESS லஞ்சம் ஊழல் விழிப்புணர்வு சமூகம் கல்வி மற்றும் அரசியல் புலனாய்வு


மலர் – 14 இதழ் – 11 மார்ச் – 2026 விலை .ரூ.20/- சென்னை

VOLUME : 14 ISSUE : 11 MARCH - 2026 RATE Rs.20/- Chennai




# 'கல்வியில் சிறந்த தமிழ்நாடு'


MAKKAL VISRANAI
MAGAZINE
ARUNAI MURASU
15th
YEARS
முப்பெரும் விழா
தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கம்
TAMIL PRESS WRITERS ASSOCIATION
மக்கள் விசாரணை - அருணை முரசு
சிறப்பு விருந்தினர் அனைவரையும்
வருக! வருக!! என அன்புடன்
வரவேற்கிறோம்...

வாழ்க தமிழ்! வளர்க தமிழகம்!!

MAKKAL VISARANAI MONTHLY MAGAZINE

மக்கள் விசாரணை ®

Anti-Correction Awareness சமூகம் கல்வி மற்றும் அரசியல் புலனாய்வு மாத இதழ்

ஆண்டு: 14 இதழ்: 10 பிப்ரவரி 2026

ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன்ஸ் சார்பாக
வெளியிடுபவர் & ஆசிரியர்
முனைவர் ஆ.மவுரியன், B.A., M.A., Ph.D.(Hons).

நிர்வாக ஆசிரியர். S.நிவேதிதா B.E.(ECE)

ஆசிரியர் குழு:
**சிவயோகி மவுரியன்,**
State President - All India Small Newspaper Association (TN)
State president : TAMIZH PRESS WRITERS ASSOCIATION
**V.அருணாச்சலம் ஆ.தே.முருகையன்**
**S.சரவணன் K.ராமசுப்பிரமணியன்**

இதழியல் ஆலோசகர்
**P.ஆறுமுகம்**, B.Sc., A.E.M.S.A.C.,
Rtd. Sr. Audit Officer, Scientific Departments (C&AG of India) New Delhi

பொறுப்பாசிரியர்
**S.அருணாச்சலா** B.Tech (AIDS)

**துணை ஆசிரியர்கள்**
M.தரணிகாந்த். S.அனந்தகிருஷ்ணன் வீர ஆறுமுகம் p.ராஜேஷ் p.c.தங்கராஜ் Dr.M. சத்யராஜ் A.E. மனோகரன் M.சின்னதுரை M.ரூபன் ப.சே.கண்ணன் M.கந்தசாமி தென்னாங்கூர் வெங்கடேசன் ந.மூர்த்தி R.சுப்பிரமணிய பாரதி R.பத்மநாபன். எம்.ஜி.ஆர். நகர் E.கோபி S.விஜய் P.குரு பாலகிருஷ்ணன் அ.மு.பறையரசன்

**முதன்மை செய்தியாளர்கள்**
S.ஜெயா மவுரியன் மாங்காடு பாலாஜி A.N.சேதுராமன் C.அன்பழகன் C.ரமேஷ் M.இப்ராகிம் M.சுரேஷ் B.ஞானவேல் ஆரணி E.ராஜேஷ் கண்ணா N.ஞானம் S.கிருஷ்ணதாஸ் K.ஐயப்பன் E.தண்டாயுதபாணி R.குமார் M.V.பிரசாத் S.முரளி அரவிந்த் கோஷ்

**நிருபர்கள்**
இர்வின்
அகிலாண்டேஸ்வரி
குருதேவ்
கனகதுர்கா

சட்ட ஆலோசகர்:
**M.ராஜசேகரன்,** M.A, B.L.,

புகைப்பட நிருபர் : **S.அருணாச்சலா**

Design : **GRACE DESIGNS** 9940211538

நிர்வாக அலுவலகம்:
**மக்கள் விசாரணை**
# 6/56 Annamalai Nagar. 1st Street
Mettupalayam westmampalam chennai - 600033
writermouriyan@gmail.com
www.makkalvisaranai.com
9840532492 9382133334



☼ நமது மக்கள் விசாரணை இதழில் வெளியாகும் பேட்டிகள், கதை, கட்டுரை மற்றும் செய்திகளில் வெளியாகும் கருத்துக்கள் சம்பந்தப்பட்டவர்களையே சாரும்.
☼ மக்கள் விசாரணை பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும் சென்னை மாநகர நீதிமன்ற எல்லைக்குட்பட்டது.*


# தலையங்கம்

## தனது 73வது வயதில்...

தமிழ்நாடு முதலமைச்சரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின், தனது 73வது பிறந்த நாளை அனைவரும் பாராட்டும் வகையில் கொண்டாடினார். வழக்கம்போல் அண்ணா, கலைஞர், பெரியார் நினைவிடங்களில் மலர் தூவி மரியாதை செலுத்திய அவர், தொடர்ந்து தொண்டர்களின் வாழ்த்து மழையில் நனைந்தார். தனக்கு வாழ்த்து தெரிவிக்க கட்டுக்கடங்காத கூட்டம் வந்திருந்தாலும், மாற்று திறனாளிகளுக்கும் முக்கியத்துவம் அளித்து அவர்களிடம் நேரில் சென்று வாழ்த்து பெற்றார்.

அண்ணா அறிவாலயத்தில் அமைச்சர்கள் முதல் தொண்டர்கள் வரை அனைவரும் அவரை பாராட்டி சென்றனர். கூட்டணி கட்சி தலைவர்களும் அவருக்கு வாழ்த்து தெரிவிக்க குவிந்தனர். இந்தியாவே போற்றும் திராவிட மாடல் நல்லாட்சி நாயகன், தனது பிறந்த நாளில் கூட ‘உழைப்பை தவிர வேறொன்றும் அறியேன்’ என தனது லட்சிய பயணத்தையே மக்கள் மத்தியில் முன்னிறுத்தியுள்ளார்.

முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்ற காலத்தில் தமிழகத்தை கொரோனா என்னும் கொடிய நோய் தாக்கி கொண்டிருந்தது. அதிலிருந்து மக்களை மீட்பதே தனது முதல் பணி என கூறிய முதல்வர், அதற்காக அமைச்சர்களையும், அரசு இயந்திரங்களையும் முடுக்கி விட்டார். விளைவு 2 மாத காலத்திற்குள் கொரோனா கட்டுக்குள் வந்தது. அதன் தொடர்ச்சியாக அவர் கொண்டு வந்த மக்களை தேடி மருத்துவம், இல்லம் தேடி கல்வி, இன்னுயிர் காப்போம், நான் முதல்வன், புதுமைப்பெண், முதலமைச்சரின் காலை சிற்றுண்டி திட்டம், பசுமை தமிழ்நாடு இயக்கம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் இந்திய அளவில் பாராட்டை பெற்றன.



**முனைவர்.சிவயோகி மவுரியன்**
ஆசிரியர்

# ‘கல்வியில் சிறந்த தமிழ்நாடு’ புதிய உயரங்களை அடைவதில் பெருமிதம் கொள்வோம்!

இந்திய அளவில் நடைபெற்ற நடப்பு கல்வியாண்டிற்கான இந்தியப் பொறியியல் நுழைவுத் தேர்வில் (JEE) தமிழ்நாடு அரசுப் பள்ளி மற்றும் அரசு மாதிரிப் பள்ளிகளை சேர்ந்த 448 மாணவ, மாணவியர்கள் உயர் மதிப்பெண்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

இச்சாதனையை பறைசாற்றும் வகையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டது பின்வருமாறு,

கல்வியால் சிறக்கும் நமது அரசுப் பள்ளி மாணவர்களைச் செய்தித்தாள்களின் முதல் பக்கத்தில் இடம்பெற வைத்துப் பூரிப்படைகிறோம்.

2021–22இல் கல்வியில் பின்தங்கிய 10 மாவட்டங்களில் தொடங்கப்பட்ட மாடல் பள்ளிகள், இன்று 38 மாவட்டங்களிலும், தலா ரூ.50 கோடி மதிப்பீட்டில் 800 மாணவர்களுக்கான உறைவிட, உட்கட்டமைப்பு வசதிகளுடன் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

அதனால்தான், கடந்த 4 ஆண்டுகளில் அரசு மற்றும் அரசு மாதிரிப் பள்ளிகளைச் சேர்ந்த 2,358 மாணவர்களும், ஆதி திராவிடர் (37) மற்றும் பழங்குடியினர் (169) பள்ளிகளைச் சேர்ந்த 206 மாணவர்களும், 93 முன்னணி உயர்கல்வி நிறுவனங்களில், 50 துறைகளில் மேற்படிப்பு பயிலுகின்றனர். அதில் 41 பேர் மிமிஜிகளிலும், 22 பேர் முழு




உதவித்தொகையுடன் வெளிநாடுகளிலும் பயில்கின்றனர்.

இதன் தொடர்ச்சியாக, இந்த ஆண்டு ஐஐடியில் நுழைவதற்கான முதற்படியை அரசு மற்றும் மாதிரிப் பள்ளிகளைச் சேர்ந்த 448 மாணவர்களும் ஆதி திராவிடர் (13) மற்றும் பழங்குடியினர் (55) பள்ளிகளைச் சேர்ந்த 68 மாணவர்களும் வெற்றிகரமாகக் கடந்துள்ளனர்.

பெரும்பாலும் முதல் தலைமுறையினராகக் கல்விச் சாலைக்குள் நுழைந்த இந்த மாணவர்களின் கனவுகளை அடைவதற்குத் துணை நிற்கின்ற பெருமையோடு, இவர்களை முன்னுதாரணமாகக் கொண்டு இன்னும் பலர் கல்வியைக் கைப்பற்றிக் கொண்டு, உன்னதமான உயரங்களை வாழ்வில் அடைந்திட வாழ்த்துகிறோம்!”

# தொகுதிப் பங்கீடு: திமுகவுடன் பேச்சு நடத்த குழு அமைத்தது இ.கம்யூனிஸ்ட்



சட்டப்பேரவை தேர்தலையொட்டி திமுகவுடன் தொகுதி பங்கீடு குறித்து பேச்சுவார்த்தை நடத்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் 4 பேர் கொண்டு குழு அமைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அக்கட்சியின் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் வெளி யிட்டுள்ள அறிக்கையில்: ”இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தொகுதி பகிர்வு பேச்சுவார்த்தைக் குழு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில நிர்வாகக் குழுக் கூட்டம் தோழர் எஸ்.கலைச்செல்வம் தலைமையில் நடைபெற்றது.

நான்கு உறுப்பினர்கள் பேச்சுவார்த்தைக் குழு எதிர்வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் மதச்சார் பற்ற முற்போக்குக் கூட்டணியில் அங்கம் பெற்றுள்ள இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில், தி.மு.கழக தலைமையோடு தொகுதி பகிர்வு பேச்சுவார்த்தை நடத்த தோழர்கள் மு.வீரபாண்டியன், (மாநிலச் செயலாளர்) இரா.முத்தரசன், கே.சுப்பராயன் எம்.பி., கோ.பழனிசாமி ஆகிய நான்கு உறுப்பினர்கள் கொண்ட பேச்சுவார்த்தைக் குழு அமைக்கப்பட்டது.

ஏற்கெனவே இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மனிதநேய மக்கள் கட்சி ஆகியன தொகுதிப் பங்கீடு குறித்து முதல்கட்ட சந்திப்பை முடித்துவிட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

# வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பள்ளிக்கட்டிடம், பேருந்து நிலையம்: உதயநிதி திறந்துவைத்தார்

வடசென்னை வளர்ச்சிக் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில், ரூ.53 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள சென்னை நடுநிலைப் பள்ளிக்கட்டிடம், பேருந்து நிலையம், விளையாட்டு வளாகம் ஆகியவற்றை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்துவைத்தார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு: மாதவரம் தொகுதிக்கு உட்பட்ட புழல் மகாலஷ்மி நகரில் அமைந்துள்ள மாதவரம் ஊராட்சி ஒன்றிய பள்ளி, கடந்த 1967ம் ஆண்டு அண்ணா முதல்வராக இருந்தபோது திறக்கப்பட்டது.

இந்நிலையில், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சிஎம்டிஏ சார்பில், ரூ.12.39 கோடி செலவில் 37,342 சதுரஅடி கட்டிடப் பரப்பளவில் தரை தளம் மற்றும் மூன்று தளங்களுடன் சென்னை நடுநிலைப் பள்ளி கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

இதில், 27 வகுப்பறைகள், தலைமை ஆசிரியர் அறை, ஆசிரியர்கள் அறை, பதிவு அறை, 2 ஆய்வகங்கள், உடற்கல்வி கூடம், நூலகம், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, சேமிப்பு அறை, ஆண்கள், பெண்கள், மாற்றுத்திறனாளிகளுக்கான கழிப்பறைகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

ஆர்.கே.நகர் தொகுதியில், சிஎம்டிஏ சார்பில் ரூ.21.95 கோடியில் தரைதளம் மற்றும் 2 தளங்களுடன் தண்டையார்ப்பேட்டை பேருந்து நிலையம், 37,157 சதுர அடி கட்டிடப் பரப்பளவில் தரைதளம் மற்றும் முதல் தளத்துடன் ஆர்.கே. நகர் விளையாட்டு வளாகம் கட்டப்பட்டுள்ளது.

இவற்றை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார். அதே போல், ராயபுரம் மண்டலம், வார்டு52, கல்லறை சாலையில் ரூ.10.32 கோடியில் கட்டப்பட்டுள்ள கலைஞர் திருமண மாளிகை, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு73, புளியந்தோப்பு, திருவேங்கடசாமி தெரு சென்னை தொடக்கப் பள்ளியில் ரூ.5.01 கோடியில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டிடத்தையும் திறந்தார்.



மேலும், தண்டையார்பேட்டை மாநகர் போக்குவரத்துக் கழக பணிமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ரூ.33.82 கோடி மதிப்பில், மேம்படுத்தப்பட்ட தண்டையார்பேட்டை1 மின்சாரப் பேருந்து பணிமனையைத் திறந்துவைத்து, ரூ.170 கோடி மதிப்பிலான 100 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகளின் இயக்கத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

அதைத்தொடர்ந்து இரண்டாம் கட்டமாக 750 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகள் இயக்கப்படுவதற்காக ரூ.289 கோடி மதிப்பீட்டில் மின்னேற்ற வசதிகளுடன் மின்சாரப் பணிமனைகளாக மேம்படுத்துதல் மற்றும் புதிய பணிமனைகள் அமைக்கும்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் சா.சி.சிவசங்கர், பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, கலாநிதி வீராசாமி எம்.பி., மாதவரம் எஸ்.சுதர்சனம் உள்ளிட்ட எம்எல்ஏ.க்கள், அதிகாரிகள் பங்கேற்றனர்.

# “அதிமுகவுக்கு இனி எதிர்காலம் இல்லை; பழனிசாமிக்கு வெற்றியே கிடையாது”

## திமுகவில் இணைந்த ஓபிஎஸ் கருத்து

திமுகவில் இணைந்தபின்னர் ஓ.பன்னீர்செல்வம் அளித்த பேட்டியில், “அண்ணா ஆரம்பித்த தாய்க் கழகமான திமுகவில் மன மகிழ்ச்சியுடன் இணைந்துள்ளேன். அண்ணா, கருணாநிதி காட்டிய வழியில் அனைவரையும் அரவணைத்து செல்லும் வகையில் கட்சியையும், ஆட்சியையும் மு.க.ஸ்டாலின் வழிநடத்தி வருகிறார்.

அரசியலில் சர்வாதிகாரமாக ஆணவப் போக்கோடு நடந்துகொள்ளும் எடப்பாடி பழனிசாமி, எந்த காலத்திலும் இனி வெற்றிபெற முடியாது எனும் சூழலை அதிமுகவுக்கு உருவாக்கியுள்ளார். ஜெயலலிதா மறைவுக்கு பின்னர் லட்சக்கணக்கான அதிமுக தொண்டர்கள் திமுகவில் இணைந்துள்ளனர்.

ஓர் அரசியல் இயக்கத்தை எப்படி நடத்த வேண்டும் என்ற இலக்கணத்தோடு ஸ்டாலின் கட்சியை வழிநடத்துகிறார். முதல்வர் ஸ்டாலின் கடந்த 5 ஆண்டுகளில் செய்த சாதனைகள் மக்களை முழுமையாகச் சென்றடைந்துள்ளது. அடித்தட்டு, ஏழை எளியவர்கள், பெண்கள் மன மகிழ்ச்சியோடு இந்த ஆட்சியில் உள்ளனர். அண்ணா, கருணாநிதி எப்படி அனைத்து கட்சிகளையும் தாயுள்ளத்தோடு சட்டப்பேரவையில் அணுகினாரோ, அதே பாணியில் முதல்வர் ஸ்டாலினும் செயல்படுகிறார்.

எடப்பாடி பழனிசாமிக்கு தலைமைப் பண்பு இல்லை. தென்மாவட்டங்களின் எந்தவொரு தலைவரும் வளர்ந்துவிடக் கூடாது என எடப்பாடி பழனிசாமி நினைக்கிறார். அவ்வாறு அதிமுகவில் தென் மாவட்டங்களில் வளரும் தலைவர்களை பழனிசாமி அழித்து



வருகிறார். பழனிசாமியால் அதிமுக அழிவுப்பாதையில் செல்கிறது.

கடந்த காலங்களில் அதிமுகவில் ஏற்பட்ட கசப்பான சம்பவங்களால் பாதிக்கப்பட்டேன். அனைவரையும் அரவணைக்கும் போக்கு இப்போது அதிமுகவில் இல்லை. அதனால் எந்த அழுத்தமும் இல்லாமல், சுயமாக முடிவெடுத்து திமுகவில் இணைந்துள்ளேன். வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் ஸ்டாலின் வாய்ப்புக் கொடுத்தால் போட்டியிடுவேன்.

எனவே, வரும் தேர்தலில் திமுக மீண்டும் வென்று ஆட்சியமைக்கும். கடந்த 5 ஆண்டுகளில் அனைத்து மக்களுக்கும் பயனளிக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி, சிறப்பான ஆட்சியை முதல்வர் ஸ்டாலின் நடத்தி வருகிறார். மீண்டும் திமுக ஆட்சியே தமிழகத்தில் அமையும்.

நான் சரியான முடிவை எடுத்துள்ளதாக அனைவரும் பாராட்டி வருகின்றனர். திமுக ‘தீய சக்தி’ என்று நான் ஒருபோதும் சொன்னது கிடையாது. அதிமுகவுக்கு இனி எதிர்காலமே இல்லை.” எனத் தெரிவித்தார்.

# இந்திய அணுமின் உற்பத்திக்கு யுரேனியம் வழங்குகிறது கனடா ஒப்பந்தம் கையெழுத்து



இந்தியாவின் அணு மின்சார உற்பத்திக்கு யுரேனியம் வழங்க கனடா ஒப்புக்கொண்டுள்ளது. இதற்கான ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் கையெழுத்திட்டுள்ளன.

கனடா பிரதமர் மார்க் கார்னி, பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பின் பேரில் அரசுமுறைப் பயணமாக கடந்த பிப்.27 ம் தேதி இந்தியா வந்தார். அவரது இந்த பயணத்தின் கடைசி நாளான இன்று, பிரதமர் மோடியை புதுடெல்லியில் உள்ள ஹைதராபாத் இல்லத்தில் சந்தித்தார்.

இந்தஉ சந்திப்பின்போது, பிரதமர் மோடியும், பிரதமர் கார்னியும் இரு நாட்டு பிரதிநிதிகளுடன் இணைந்து பேச்சுவார்த்தை நடத்தினர். இந்தியா கனடா இடையேயான ஒத்துழைப்பில் இதுவரை ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை ஆய்வு செய்த அவர்கள், வர்த்தகம், முதலீடு, எரிசக்தி, முக்கிய கனிமங்கள், விவசாயம், கல்வி, ஆராய்ச்சி உள்ளிட்ட முக்கிய துறைகளில் ஒத்துழைப்பை மேலும் அதிகரிப்பது குறித்து ஆலோசனை நடத்தினர்.

இதையடுத்து, அணு மின்சார உற்பத்திக்கான யுரேனியத்தை வழங்குவது தொடர்பான ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் கையெழுத்திட்டன. இந்த ஒப்பந்தத்தின் கீழ், இந்தியாவுக்கு கனடா யுரேனியத்தை வழங்கும். கனிம வளத் துறையில்

ஒத்துழைப்பு உட்பட பல ஒப்பந்தங்களில் இரு தரப்பும் கையெழுத்திட்டன.

பின்னர் இரு தலைவர்களும் செய்தியாளர்களிடம் பேசினர். அப்போது பிரதமர் நரேந்திர மோடி, ''பிரதமர் மார்க் கார்னியை இந்தியாவில் வரவேற்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். பிரதமராக இது அவரின் முதல் இந்தியப் பயணம். இதை நாங்கள் ஒரு முக்கிய மைல்கல்லாகக் கருதுகிறோம். கடந்த ஆண்டு கனடாவில் நடைபெற்ற ஜி7 உச்சி மாநாட்டில், அவர் என்னையும் எனது பிரதிநிதிகள் குழுவையும் அன்புடன் வரவேற்றார். இன்று அதே உளமார்ந்த நட்புடன் அவரை வரவேற்பது எனக்குப் பெருமை.

எங்கள் முதல் சந்திப்பிலிருந்தே, இருநாட்டு உறவுகளில் புதிய உற்சாகம், பரஸ்பர நம்பிக்கை மற்றும் நேர்மறை ஆற்றல் ஏற்பட்டுள்ளது. ஒத்துழைப்பு காரணமாக அனைத்து துறைகளிலும் அதிகரித்து வரும் முன்னேற்றத்துக்கான புகழை எனது நண்பர் பிரதமர் கார்னி அவர்களுக்கு அளிக்கிறேன்.

இந்தியாவும் கனடாவும் ஜனநாயக மதிப்புகளில் உறுதியான நம்பிக்கை கொண்டவை. மனிதகுல நலன் எங்கள் பொதுவான நோக்கம். இதுவே எங்களை ஒவ்வொரு துறையிலும் முன்னேற ஊக்குவிக்கிறது.

இன்று, இந்த நோக்கத்தை அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்வது குறித்து விவாதித்தோம். 2030க்குள் இருநாட்டு வர்த்தகத்தை 50 பில்லியன் அமெரிக்க டாலராக உயர்த்துவது எங்கள் இலக்கு. பொருளாதார ஒத்துழைப்பின் முழு திறனையும் வெளிக்கொணர வேண்டும் என்பதே எங்கள் முன்னுரிமை. இதற்காக விரைவில் Comprehensive Economic Partnership Agreementஐ இறுதி செய்ய முடிவு செய்துள்ளோம். இது முதலீடு மற்றும் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும்'' என தெரிவித்தார்.



■ மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.இரா.இராஜேந்திரன் அவர்கள் சேலம் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில், ஊராட்சி உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் ரூ.26.40 இலட்சம் மதிப்பில் சேலம் மாவட்டம், கொண்டப்பநாயக்கன்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக்கு செல்லும் தார்சாலை புனரமைக்கும் பணிக்கு இன்று (02.03.2026) அடிக்கல் நாட்டி வைத்தார்கள். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, இ.ஆ.ப., சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.டி.எம்.செல்வகணபதி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

# முதியோர், மாற்றுத் திறனாளி உதவித்தொகை பெறுவோருக்கு தமிழக அரசு ரூ.2,000 சிறப்பு நிதி வரவு!

தமிழக அரசின் மாத ஒய்வூதிய உதவித் தொகை பெற்று வரும் முதியோர், கணவரை இழந்த பெண்கள், வயது முதிர்ந்த திருநங்கையர், மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு மார்ச் மாத ஓய்வூதியத்துடன் சேர்த்து ரூ.2000 சிறப்பு நிதி வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது சமூக வலைதளப் பக்கத்தில் பகிர்ந்துள்ள பதிவில், “கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் பெண்களுக்குக் கோடைக்காலச் சிறப்புத் தொகுப்பாக 2 ஆயிரம் ரூபாய் வழங்கியது பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளதோடு, சமூகத்தின் விளிம்புநிலையில் வாழ்ந்து, அரசின் மாத ஓய்வூதியத் உதவித்தொகை பெற்று வரும் முதியோர், கணவரை இழந்த பெண்கள், வயது முதிர்ந்த திருநங்கையர், மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கும் இத்தகைய சிறப்பு நிதியை வழங்கிட வேண்டும் எனக் கோரிக்கைகள் வந்தன.

நம்பிக்கையுடன் அவர்கள் வைத்த கோரிக்கையை இன்று நிறைவேற்றியுள்ளோம். நலிவு நிலை போக்கும் சிறப்பு நிதியாக 2000 ரூபாயை மார்ச் மாத ஓய்வூதியத்துடன் சேர்த்து வங்கிக் கணக்கில் வரவு வைத்துள்ளோம்!

இதன்படி, பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் பயன்பெற்று வரும் முதியோர், கணவரை இழந்த பெண்கள் என, மொத்தம் 29 இலட்சத்து 29 ஆயிரம் பயனாளிகளுக்கு தலா 3200 ரூபாயும், 5 இலட்சத்து 92 ஆயிரம் மாற்றுத் திறனாளிகளுக்கு தலா 3500 ரூபாயும், பராமரிப்பு உதவித்தொகை பெற்றுவரும் 2 இலட்சத்து 58 ஆயிரம் மாற்றுத் திறனாளிகளின் குடும்பங்களுக்கு, தலா 4000 ரூபாயும் இன்று காலை வழங்கியிருக்கிறோம்.



அதுமட்டுமின்றி, மீனவர் குடும்பங்களுக்கு ஏப்ரல் முதல் ஜூன் வரையான காலத்திற்கான மீன்பிடித் தடை கால உதவித்தொகையாக, குடும்பம் ஒன்றுக்கு ரூ.8000 வீதம் மொத்தம் 1,62,900 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

அதேபோல, நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த 14,870 தேயிலை விவசாயிகள் பயன்பெறும் வகையில், 15 கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலைகள் மூலம் கொள்முதல் செய்யப்பட்ட பசுந்தேயிலைக்குக் கிலோ இரண்டு ரூபாய் ஆதார விலை என 8.53 கோடி ரூபாய் நிதி வழங்கப்படுகிறது.

இந்தத் தருணத்தில் மீண்டும் ஒருமுறை சூளுரைக்கிறேன் தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் ஒருவரையும் பின்தங்க விட மாட்டோம்!” என்று குறிப்பிட்டுள்ளார்

# அதிமுக ஆட்சி அமைய தென் மாவட்ட மக்கள் துணை நிற்பார்கள்



தேசிய ஜனநாயகக் கூட்டணி அதிக தொகுதிகளில் வெற்றிபெற்று அதிமுக ஆட்சி அமைய தென் மாவட்ட மக்கள் துணை நிற்பார்கள் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் பழனிசாமி தெரிவித்தார். மதுரையில் நேற்று நடைபெற்ற தேசிய ஜனநாயகக் கூட்டணி பொதுக்கூட்டத்தில் அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி பேசியதாவது: தமிழகத்தில் உள்ள மக்கள் விரோத ஆட்சியை அகற்றவே தேசிய ஜனநாயக கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது.

எங்கள் கூட்டணியில் மக்கள் செல்வாக்குப் பெற்ற கட்சிகள் இணைந்துள்ளன. எம்ஜிஆர், ஜெயலலிதாவுக்கு தென் மாவட்ட மக்கள் பக்கபலமாக இருந்தனர். எம்ஜிஆர் அதிமுகவை தொடங்கியபோது திண்டுக்கல் மக்களவைத் தேர்தலில் வெற்றியைக் கொடுத்து தென் மாவட்ட மக்கள் ஆதரித்தனர்.

அதுபோல், வரும் சட்டப்பேரவைத் தேர்தலிலும் அதிக தொகுதிகளில் வெற்றிபெறச் செய்து அதிமுக ஆட்சி அமைவதற்கு தென் மாவட்ட மக்கள் துணை நிற்பார்கள்.

மத்திய அரசு நிதி வழங்கவில்லை என்று முதல்வர் ஸ்டாலின் அடிக்கடி அவதூறுகளைப் பரப்புகிறார். இன்று கூட தமிழகத்துக்கு ரூ.4,500 கோடி வளர்ச்சித் திட்டங்களை மோடி தொடங்கி வைத்துள்ளார்.

குடும்ப நலன் மட்டுமே திமுக கட்சியின் நிலைப்பாடாக உள்ளது. 2ஜி ஸ்பெக்ட்ரம் முறைகேட்டில் ரூ.1 லட்சத்து 76 ஆயிரம் கோடி ஊழல் செய்தனர்.

சர்க்காரிய கமிஷன் அறிக்கையில் திமுக விஞ்ஞான முறையில் ஊழல் செய்ததாக குறிப்பிட்டுள்ளனர். கடந்த 5 ஆண்டு கால ஊழல் நிறைந்த திமுக ஆட்சி அகற்றப்பட வேண்டும்.

தென் மாவட்டங்களுக்கு அதிமுக ஆட்சியில் பல்வேறு திட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. 11 அரசு மருத்துவக் கல்லூரிகள் அதிமுக ஆட்சியில் கொண்டு வரப்பட்டன. திமுக ஆட்சியில் ஒரு மருத்துவக் கல்லூரியைக்கூட பெற முடியவில்லை.

அதிமுக ஆட்சியில் இருந்தபோதுதான் 'எய்ம்ஸ்' மருத்துவமனை திட்டம் மதுரைக்குக் கொண்டு வரப்பட்டது. தற்போது இந்த மருத்துவமனை கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அந்த மருத்துவமனையை வரவிடாமல் திமுக தடுக்க பார்த்தது. மதுரை விமான நிலைய விரிவாக்கத்துக்கு அதிமுக ஆட்சியில் 'அண்டர் பாஸ்' முறையில் முயற்சிகளைச் செய்தோம். தற்போது இந்த திட்டத்தையும் திமுக அரசு முடக்கி வைத்துள்ளது.

# கோவை வணிகவரித் துறையில் லஞ்சம் பெற்ற பெண் அதிகாரி அவரது கணவருடன் கைது



வணிகவரித்துறை உதவி ஆணையர் மகேஸ்வரி, தனது கணவர் மூலம் 60 ஆயிரம் ரூபாய் லஞ்சம் வாங்கிய நிலையில் கணவன் மனைவி இருவரையும் லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் கைது செய்தனர்.

கோவை வணிக வரித்துறை உதவி ஆணையராக பணிபுரிந்து வருபவர் மகேஸ்வரி. இவரிடம் தனியார் ரியல் எஸ்டேட் நிறுவனத்தில் பணிபுரியும் அகிலேஷ் என்பவர் நிறுவனத்தின் சார்பில் உள்ளீட்டு வரியான (input tax) 11 இலட்சத்தை திரும்பி பெற விண்ணப்பித்து இருந்தார். அதனை முடித்து கொடுக்க ஒரு லட்ச ரூபாய் லஞ்சமாக கொடுக்க வேண்டும் என உதவி ஆணையர் மகேஸ்வரி கேட்டதாக தெரிகிறது. அவ்வளவு பணம் கொடுக்க முடியாது என அகிலேஷ் தெரிவித்த நிலையில், இறுதியாக 60 ஆயிரம் ரூபாய் என பேரம் பேசி முடிக்கப்பட்டுள்ளது.

லஞ்சம் கொடுக்க விரும்பாத அகிலேஷ் இதுகுறித்து கோவை லஞ்ச ஒழிப்பு துறை போலீசாரிடம் புகார் அளித்தார். அவர்கள் அறிவுறுத்தலின் படி ரசாயனம் தடவிய பணத்துடன் சென்றுள்ளார். அப்போது உதவி ஆணையர் மகேஸ்வரி, தனசேகரன் என்பவரின் நம்பரை கொடுத்து அவரிடம் பணத்தை கொடுக்கும்படி தெரிவித்துள்ளார். கொடிசியா மைதானம் அருகில் தனசேகரன் இருப்பதாக தெரிவித்த நிலையில், அங்கு சென்று அகிலேஷ் அவரது காரில் ஏறி அமர்ந்து பணத்தை கொடுத்தார். மறைந்திருந்த லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் தனசேகரனை பிடித்து விசாரித்த பொழுது அவர் உதவி ஆணையர் மகேஸ்வரியின் கணவர் என்பது தெரிய வந்தது. இதனை அடுத்து தனசேகரனை லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் வணிகவரித்துறை அலுவலகத்திற்கு அழைத்து வந்தனர். பின்னர் உதவி ஆணையர் மகேஸ்வரி மற்றும் தனசேகரன் ஆகிய இருவரையும் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# விஜய்க்கு ஆப்பு வைத்த உயர்நீதிமன்றம்! விதிக்கப்பட்ட அபராதம் செல்லும் என உத்தரவு!



வருமான வரி வழக்கில் நடிகர் விஜய்க்கு ஒன்றரை கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது செல்லும் என சென்னை உயர் நீதிமன்றம் வெள்ளிக்கிழமை (பிப்.06) அன்று தீர்ப்பளித்துள்ளது. கடந்த 2015–16 நிதியாண்டுக்கான வருமான வரி கணக்கை நடிகர் விஜய் தாக்கல் செய்தபோது, அந்த ஆண்டுக்கான வருமானமாக 35 கோடி 42 லட்சத்து 91 ஆயிரத்து 890 ரூபாய் பெற்றதாக குறிப்பிட்டிருந்தார். அந்த ஆண்டுக்கான மதிப்பீட்டு நடவடிக்கையை மேற்கொண்ட வருமான வரித்துறை, நடிகர் விஜய் வீட்டில் கடந்த 2015ம் ஆண்டு நடத்திய சோதனையில் கைப்பற்றப்பட்ட ஆவணங்களுடன் ஒப்பிட்டு, 'புலி' படத்திற்கு பெற்ற 15 கோடி ரூபாய் வருமானத்தை கணக்கில் காட்டவில்லை என கண்டறிந்தது. வருமானத்தை மறைத்ததற்காக ஒரு கோடியே 50 லட்சம் ரூபாய் அபராதம் விதித்து, கடந்த 2022ம் ஆண்டு ஜூன் 30ம் தேதி வருமான வரித் துறை உத்தரவு பிறப்பித்தது.

தனக்கு அபராதம் விதித்து வருமான வரித் துறை பிறப்பித்த உத்தரவை எதிர்த்து நடிகர் விஜய் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், வருமான வரித் துறை உத்தரவுக்கு இடைக்கால தடை விதித்து ஏற்கெனவே உத்தரவு வழங்கி இருந்தது. இந்த நிலையில், விஜய் தாக்கல் செய்த வழக்கின் இறுதி விசாரணை நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி முன் கடந்த 23ம் தேதிக்கு நடைபெற்றது. அப்போது, விஜய் தரப்பில், சட்டப்படி அபராத உத்தரவை 2019 ஜூன் 30ம் தேதிக்கு முன்பே பிறப்பித்திருக்க வேண்டும்.

ஆனால், காலதாமதமாக 2022ம் ஆண்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் அதனை ரத்து செய்ய வேண்டும் என வாதிடப்பட்டது. வருமான வரித் துறை தரப்பில், வருமான வரி மதிப்பீட்டை எதிர்த்த அப்பீல் முடிந்த பின், ஆறு மாத கால அவகாசத்துக்குள்ளேயே அபராத உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. வருமான வரிச் சட்டப்படி நடிகர் விஜய்க்கு அபராதம் விதித்து சரிதான். விஜய் தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில், இந்த வழக்கில் நீதிமன்றம் இன்று தீர்ப்பளித்துள்ளது. அதில், வருமான வரிச் சட்டப்படி நடிகர் விஜய்க்கு அபராதம் விதித்து சரிதான் என விஜய் தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்தது . இந்நிலையில்,வருமான வரி வழக்கில் நடிகர் விஜய்க்கு ஒன்றரை கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது செல்லும் என தெரிவித்துள்ளது.

# வெற்றிக் கணக்கை தொடங்குமா நாம் தமிழர் கட்சி? சீமான் வியூகமும், களச் சூழலும்



இந்த முறையும் தனித்துப் போட்டி என முடிவெடுத்து முதல் ஆளாக 234 தொகுதிகளுக்கும் வேட்பாளர்களை அறிவித்துவிட்டார் சீமான். நாம் தமிழர் கட்சி இம்முறையாவது சட்டப்பேரவைக்குள் நுழையுமா என்பதுதான் தற்போதைய கேள்வியாக உள்ளது.

தமிழகத்தில் 'தமிழ்த் தேசியம்' என்ற தனித்த அடையாளத்தோடு தொடர்ந்து களம் கண்டு வருகிறது நாம் தமிழர் கட்சி. 2010 முதல் அரசியலில் இருந்தாலும், வாக்கு அரசியலில் நாதக 2016ல் அடியெடுத்து வைத்தது. முதல் தேர்தலிலேயே 1.1 சதவீத வாக்குகளைப் பெற்று கவனம் ஈர்த்தது அந்தக் கட்சி. தொடர்ந்து 2019 மக்களவைத் தேர்தல், 2021 சட்டப்பேரவைத் தேர்தல்களில் 4% மற்றும் 6% என படிப்படியாக நாம் தமிழரின் வாக்கு வங்கி உயர்ந்தது. 2024 மக்களவைத் தேர்தலில் 8.2 சதவீத வாக்குகளைப் பெற்று அங்கீகரிக்கப்பட்ட மாநிலக் கட்சியாக மாறியது நாம் தமிழர் கட்சி.

அரசியல் பின்புலம், பெரிய பொருள் வசதி, சினிமா பின்புலம் என எந்த ஆற்றலும் இன்றி 10 ஆண்டுகளில் நாம் தமிழர் கட்சியின் பாய்ச்சல் நிச்சயமாக கவனிக்க வேண்டியது. இந்த 10 ஆண்டுகளில் எண்ணற்ற சர்ச்சைகள், வழக்குகள், முக்கிய நிர்வாகிகளின் விலகல் என பல கட்ட சோதனைகளையும் தனியொரு ஆளாக சமாளித்து இம்முறையும் துணிந்து தனித்தே நிற்கிறார் சீமான்.

தமிழகத்தில் இதுவரை தேசிய கட்சிகள், திராவிட கட்சிகள்தான் கோலோச்சி வருகிறது. ஆனால், இவ்விரு கட்சிகளையும் கடுமையாக

சாடி ‘தமிழ்த் தேசியம்’ பேசும் கட்சியாக வளர்ந்துள்ளது நாதக. பெரியார் பெயரை ஒப்புக்காவது சொல்லாத கட்சிகள் இங்கு இல்லை. ஆனால், பெரியாரை மிகக் கடுமையாக விமர்சித்தும், அதே ஈரோடு கிழக்கில் சுமார் 16 சதவீதம் வாக்குகளை வாங்கினார் சீமான். தமிழக அரசியலில் முக்கிய போட்டியாளராக தற்போது விஜய் நுழைந்துள்ள நிலையில், நாம் தமிழர் கட்சி இந்தத் தேர்தலில் என்ன செய்யப் போகிறது என்று பார்ப்போம்...

**வெற்றிக் கணக்கை தொடங்குவாரா சீமான்?**

2016 முதல் படிப்படியாக வாக்கு வங்கியை உயர்த்தினாலும், நாம் தமிழர் கட்சியால் இதுவரை ஒரு இடத்திலும் வெற்றிபெற முடியவில்லை. குறைந்தபட்சம் சீமான் நிற்கும் தொகுதியில் கூட இதுவரை வெற்றி வசமாகவில்லை என்பதுதான் கள நிலவரம். இந்த முறை விஜய்யும் களத்துக்கு வந்துள்ளதால், நாம் தமிழர் கட்சி நெருக்கடியில் இருப்பது கண்கூடு.

விஜயகாந்துக்குப் பின்னர் தமிழகத்தில் வலுவான மூன்றாவது பெரிய ஆளுமை யாரும் இல்லாத சூழல் இருந்தது. அந்த இடத்தை சீமான் நிரப்பி வந்தார். எனவேதான், திமுக, அதிமுகவை விரும்பாத வாக்காளர்களின் முக்கிய தேர்வாக நாம் தமிழர் கட்சி இருந்தது. ஆனால், இம்முறை மாற்றத்தை விரும்பும் வாக்காளர்களுக்கு விஜய் என்னும் இன்னொரு தேர்வும் உள்ளது. எனவே, இம்முறை இவர்களின் ஆதரவை இருவரில் யார் கூடுதலாக பெறுவார் என்பதே எதிர்பார்ப்பு.

சரிபாதி தொகுதிகளில் பெண்களுக்கு வாய்ப்பு, எளிய மக்களுக்கு வாய்ப்பு, பிராமணர்கள் முதல் பிறமொழியினர் வரை அனைத்து சமூகங்களுக்கும் வாய்ப்பு, சூழலியல் சிக்கல்களை முன்வைத்து பிரச்சாரம், கொள்கைகளை முன்வைத்த அரசியல் என சமீபத்தில் சீமான் நடத்திய ‘மாற்றத்தை விரும்பும் மக்களின் மாநாடு’ பெரும் பேசுபொருளானது. எவ்வித எதிர்பார்ப்பும் அற்று, கைக்காசை போட்டு இந்த மாநாட்டுக்கு கூடிய கூட்டம் லட்சத்தை தாண்டியது மற்ற கட்சிகளின் கவனத்தை ஈர்த்தது.

கூட்டம் கூடுகிறது, கொள்கை இருக்கிறது, நட்சத்திர பேச்சாளர்கள் சொல்மழை பொழிகின்றனர், சீமானின் எழுச்சிமிகு பேச்சு இருக்கிறது என்பதெல்லாம் நாதகவின் பலம். ஆனால், இம்முறை நிச்சயம் சில தொகுதிகளிலாவது வெற்றிபெற வேண்டும் என அக்கட்சியின் தொண்டர்கள் ஆழமாக நம்புகின்றனர். அதற்கேற்ப வியூகம் சீமானிடம் உள்ளதா?

சீமான் இம்முறை தன் சொந்த தொகுதியான காரைக்குடியில் போட்டியிடுகிறார். இந்த தொகுதியில் திமுக, அதிமுக நேரடியாக களமிறங்காது என்பது பிளஸ். பாஜக, காங்கிரஸ், தவெக என மும்முனைப் போட்டியை சீமான் எதிர்கொள்ள வேண்டும். அதனையும் தாண்டி சீமான் வெற்றிபெற சில வாய்ப்புகள் கண்முன்னே தெரிகிறது. முதல்முறையாக சீமானை சட்டப்பேரவைக்கு அனுப்பலாமா என்பதை காரைக்குடி மக்கள்தான் முடிவு செய்ய வேண்டும்.

காரைக்குடியைப் போல தென் தமிழகத்தில் தேசிய கட்சிகளின் ஆதிக்கம் நிறைந்த சில தொகுதிகளில் நாதகவின் பலம் அதிகமாக உள்ளது. அங்கே தவெகவும் வாக்குகளைப் பிரிப்பதால் தங்களால் சில தொகுதிகளை வெல்ல முடியும் என்று சீமான் கணக்குப் போடுகிறார். அதேபோல, மற்ற கட்சிகளையெல்லாம் தாண்டி நாதகவினர் விஜய்யை ரவுண்டு கட்டி விமர்சித்து வருகின்றனர். எனவே விஜய்யின் தாக்கத்தை சமாளித்து, குறைந்த பட்சம் இம்முறை 8.2% வாக்குகளையாவது நாதக தக்கவைக்க வேண்டும். அதனையும் மனதில் வைத்தே சீமான் தேர்தல் வியூகங்களை வகுத்து வருகிறார்.

இப்போதைய சூழலில், திமுக அதிமுக பிரதான போட்டி என மாறி நிற்கிறது. அடுத்தடுத்த இடங்களை பிடிக்க தவெக ஞ நாதக மல்லுக்கட்டுகிறது என்கின்றனர் அரசியல் விமர்சகர்கள். இந்த தேர்தல் நாதகவுக்கு மிகப் பெரிய அக்னிப் பரீட்சைதான், அதில் சீமான் வெல்வாரா என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

# உச்சநீதிமன்றத்தில் வழக்கறிஞராக கர்ஜித்த மம்தா பானர்ஜி!

இந்திய அரசியலிலும் நீதித்துறையிலும் இதுவரை நிகழாத ஒரு அபூர்வமான நிகழ்வு இன்று அரங்கேறியுள்ளது. மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, ஒரு மாநிலத்தின் முதலமைச்சராக மட்டுமல்லாமல், ஒரு தேர்ந்த வழக்கறிஞராகத் கருப்பு சால்வை அணிந்து உச்சநீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி வாதாடினார்.

* நீதிமன்றத்தில் முதல்வர்: உச்சநீதிமன்றத்தின் 1வது நீதிமன்ற அறையில், தலைமை நீதிபதி சூர்ய காந்த் தலைமையிலான அமர்வு முன் மம்தா பானர்ஜி தனது வாதங்களை முன்வைத்தார். ஒரு சிட்டிங் சி.எம் (Sitting CM) உச்சநீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி வாதாடுவது இந்திய வரலாற்றிலேயே இதுவே முதல்முறை.

* "ஜனநாயகத்தைக் காப்பாற்றுங்கள்": "நீதி கதவுகளுக்குப் பின்னால் அழுது கொண்டிருக்கிறது. நான் ஒரு மாநிலத்தின் முதல்வராக அல்ல, இந்த நாட்டின் குடிமகளாக மக்களின் உரிமைகளுக்காக இங்கே நிற்கிறேன். தயவுசெய்து ஜனநாயகத்தைக் காப்பாற்றுங்கள்" என்று மம்தா உணர்ச்சிகரமாக வாதிட்டார்.

* தேர்தல் ஆணையத்தின் மீது தாக்குதல்: * வாக்காளர் பட்டியலில் இருந்து சுமார் 58 லட்சம் பெயர்கள் முறையற்ற முறையில் நீக்கப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டினார்.

* "மற்ற மாநிலங்களில் இல்லாத நடைமுறைகள் ஏன் மேற்கு வங்கத்தில் மட்டும்? தேர்தல் ஆணையம் மேற்கு வங்கத்தை மட்டுமே குறிவைக்கிறது" என்று கேள்வி எழுப்பினார்.

* தேர்தல் ஆணையம் வாட்ஸ்அப் மூலம் அறிவுறுத்தல்களை வழங்குவதாகக் கூறி, அதை 'வாட்ஸ்அப் ஆணையம்' (WhatsApp



Commission) என்றும் விமர்சித்தார்.

* நீதிமன்றத்தின் அதிரடி: மம்தாவின் வாதங்களைக் கேட்ட தலைமை நீதிபதி, "ஒவ்வொரு பிரச்சனைக்கும் தீர்வு உண்டு" என்று குறிப்பிட்டார். மேலும், மேற்கு வங்கத்தில் மட்டும் ஏன் மைக்ரோ அப்சர்வர்கள் (Micro Observers) நியமிக்கப்பட்டனர் என்பது குறித்து விளக்கமளிக்க இந்திய தேர்தல் ஆணையத்திற்கு (ECI) நோட்டீஸ் அனுப்பி உத்தரவிட்டார்.

வழக்கின் பின்னணி:

மேற்கு வங்கத்தில் தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வரும் சிறப்பு தீவிர திருத்த (SIR) நடைமுறைக்கு எதிராக இந்த சட்டப்போராட்டம் தொடுக்கப்பட்டுள்ளது. வாக்காளர் பட்டியலில் உள்ள குளறுபடிகள் மற்றும் லட்சக்கணக்கான பெயர்கள் நீக்கப்பட்டதை எதிர்த்து மம்தா பானர்ஜி இந்த துணிச்சலான முடிவை எடுத்துள்ளார்.

முக்கிய குறிப்பு: மம்தா பானர்ஜி கொல்கத்தாவில் உள்ள ஜோகேஷ் சந்திர சௌத்ரி சட்டக் கல்லூரியில் பயின்ற பட்டதாரி வழக்கறிஞர் (LLB) ஆவார். அவர் கடைசியாக 2003ஆம் ஆண்டு வழக்கறிஞராகப் பணியாற்றிய நிலையில்,

23 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் தனது வாதத் திறமையை நீதிமன்றத்தில் நிரூபித்துள்ளார்.

முதல்வர் மம்தா பானர்ஜி இந்த சட்டப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு அடிப்படையாக இருக்கும் இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகள் மற்றும் தேர்தல் நடைமுறைச் சட்டங்கள் குறித்த விரிவான தொகுப்பு இதோ:

சட்ட ரீதியான பின்னணி: முக்கிய அரசியலமைப்பு பிரிவுகள் மற்றும் சட்டங்கள்

மம்தா பானர்ஜி தனது வாதத்தில் முன்வைத்த கோரிக்கைகள் அனைத்தும் பின்வரும் சட்டப் பிரிவுகளின் கீழ் வருகின்றன:

1. இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகள் (Constitutional Articles)

* சட்டப்பிரிவு 324 (Article 324): இந்திய தேர்தல் ஆணையத்திற்குத் தேர்தல்களை நடத்துவதற்கும், வாக்காளர் பட்டியலை மேற்பார்வை யிடுவதற்கும் அதிகாரம் வழங்குகிறது. ஆனால், இந்த அதிகாரத்தை ஆணையம் தவறாகப் பயன்படுத்துவதாக மம்தா வாதிடுகிறார்.

* சட்டப்பிரிவு 326 (Article 326): இது 18 வயது நிரம்பிய ஒவ்வொரு குடிமகனுக்கும் வாக்களிக்கும் உரிமையை வழங்குகிறது. "வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர்களை முறையற்று நீக்குவது என்பது, அரசியலமைப்பு வழங்கியுள்ள அடிப்படை உரிமையைப் பறிப்பதாகும்" என்பது மம்தாவின் பிரதான வாதம்.

* சட்டப்பிரிவு 226 (Article 226): பொதுவாக ஒரு மாநில அரசு உயர்நீதிமன்றத்தை அணுகுவதற்கு இது உதவும். ஆனால், இது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல் சீர்திருத்தம் என்பதால், மம்தா நேரடியாக உச்சநீதிமன்றத்தை (சட்டப்பிரிவு 32) நாடியுள்ளார்.

2. மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1950 (Representation of the People Act, 1950)

வாக்காளர் பட்டியல் தயாரிப்பு மற்றும் திருத்தம் தொடர்பாக இந்தச் சட்டத்தின் கீழ் உள்ள பிரிவுகள் இன்று நீதிமன்றத்தில் விவாதிக்கப்பட்டன:

* பிரிவு 15 (Section 15): ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு வாக்காளர் பட்டியல் இருக்க வேண்டும் என்பதை உறுதி செய்கிறது.

* பிரிவு 21 (Section 21): வாக்காளர் பட்டியலை அவ்வப்போது திருத்தம் செய்வது (Revision of rolls) குறித்த விதிகள் இதில் உள்ளன. தேர்தல் ஆணையம் மேற்கொள்ளும் சிறப்பு தீவிர திருத்தம் (SIR) இந்த விதியின் கீழ் வருகிறது.

* பிரிவு 22 (Section 22): வாக்காளர் பட்டியலில் உள்ள பெயர்களை நீக்குவதற்கு முன்னால், சம்பந்தப்பட்ட நபருக்கு முறையான அறிவிப்பு (Notice) வழங்கப்பட வேண்டும். "லட்சக்கணக்கான பெயர்கள் நோட்டீஸ் இன்றி நீக்கப்பட்டுள்ளன" என்பதே மம்தாவின் சட்டப்பூர்வ குற்றச்சாட்டு.

3. உச்சநீதிமன்றத்தில் வாதாட அனுமதி வழங்கிய சட்டம்

ஒரு முதலமைச்சர் எப்படி வழக்கறிஞராக வாதாட முடியும் என்ற கேள்விக்கு பதில் இதோ:

* வழக்கறிஞர்கள் சட்டம், 1961 (Advocates Act, 1961): மம்தா பானர்ஜி ஒரு பதிவு செய்யப்பட்ட வழக்கறிஞர் என்பதால், அவர் தனது வாதங்களை முன்வைக்கத் தகுதி உடையவர்.

* பிரிவு 32 (Section 32): ஒரு வழக்கில் தொடர்புடைய நபர் (Party-in-person), வழக்கறிஞராக இல்லாவிட்டாலும் கூட, நீதிமன்றத்தின் அனுமதியுடன் தனது தரப்பு நியாயத்தை வாதாடலாம். மம்தா பானர்ஜிக்கு இந்த சிறப்பு அனுமதியை உச்சநீதிமன்றம் வழங்கியுள்ளது.

# ரியல் எஸ்டேட் முகவர்களுக்கு 'பணப்புழக்க' பூஸ்ட்: வரி நடைமுறைகளில் மத்திய அரசு அதிரடி மாற்றம்



இந்திய ரியல் எஸ்டேட் துறையில் இயங்கி வரும் லட்சக்கணக்கான சிறு மற்றும் தனிநபர் முகவர்களின் நீண்டகால கோரிக்கைகளை ஏற்று, மத்திய நிதி அமைச்சகம் மற்றும் வருமான வரித்துறை மிக முக்கியமான நடைமுறை மாற்றங்களை அமல்படுத்தியுள்ளது. இந்த சீர்திருத்தங்கள் முகவர்களின் செயல்பாட்டு மூலதனத்தை அதிகரிப்பதோடு, தொழில் புரிவதை எளிதாக்கும் நோக்கில் வடிவமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, கமிஷன் தொகையில் முடங்கும் வரிப்பணம் மற்றும் சொத்துப் பரிமாற்றத்தில் இருந்த சிக்கலான விதிமுறைகள் இப்போது எளிமையாக்கப்பட்டுள்ளன.

முதலாவதாக, பில்டர்கள் மற்றும் கட்டுமான நிறுவனங்கள் முகவர்களுக்கான கமிஷன் தொகையை விடுவிக்கும்போது, முகவரின் ஒட்டுமொத்த வரிப் பொறுப்பைக் கணக்கில் கொள்ளாமல் அதிகப்படியான வரிப் பிடித்தம் (TDS) செய்து வந்த முறைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. ரியல் எஸ்டேட் தொழிலில் விளம்பரம்,

பயணம் மற்றும் களப்பணிகளுக்காக முகவர்கள் அதிக செலவு செய்ய வேண்டியுள்ளதால், அவர்களின் நிகர லாபம் குறைவாகவே இருக்கும். இதனைச் சரிசெய்ய, முகவர்கள் இனி வருமான வரித் துறையின் ஆன்லைன் போர்ட்டல் வழியாக 'குறைந்த அல்லது பூஜ்ய வரிப் பிடித்தம்' கோரி விண்ணப்பிக்கலாம். இந்தச் சான்றிதழைப் பெற்ற பிறகு, பில்டர்கள் குறைவான வரியை மட்டும் பிடித்துவிட்டு முழு கமிஷன் தொகையையும் முகவர்களுக்கு வழங்க முடியும். இது சிறு முகவர்களின் கைகளில் உடனடிப் பணப்புழக்கத்தை உறுதி செய்வதோடு, ரீஃபண்ட் தொகைக்காக வருமான வரித் துறையிடம் பல மாதங்கள் காத்திருக்க வேண்டிய அவசியத்தையும் நீக்குகிறது.

அடுத்தபடியாக, வெளிநாடு வாழ் இந்தியர்களிடமிருந்து (NRI) சொத்துக்களை வாங்கும் பரிவர்த்தனைகளில் இருந்த மிகப்பெரிய முட்டுக்கட்டை அகற்றப்பட்டுள்ளது. இதற்கு முன்பு, ஒரு குடியிருப்பாளர் ழிஸிமியிடம் இருந்து சொத்து வாங்கும்போது, வரியைக் கழிக்க பிரத்யேகமாக 'டேன்' (TAN) எனப்படும் வரிப் பிடித்த கணக்கு எண்ணைப் பெற வேண்டிய கட்டாயம் இருந்தது. இது ஒருமுறை மட்டும் சொத்து வாங்கும் சாதாரண மக்களுக்கும், அந்த டீலை முடித்துத் தரும் முகவர்களுக்கும் பெரும் சிரமத்தை ஏற்படுத்தியது. தற்போதைய மாற்றத்தின்படி, தனிநபர் வாங்குபவர்கள் தங்கள் வசம் உள்ள PAN கார்டைப் பயன்படுத்தியே இந்த வரிப் பிடித்தத்தைச் செய்ய முடியும். இந்த எளிமையான நடைமுறை சொத்துப் பரிமாற்றத்தை வேகப்படுத்துவதோடு, வெளிநாடு வாழ் இந்தியர்களின் முதலீடுகளை இந்திய ரியல் எஸ்டேட் சந்தையில் அதிகப்படுத்தவும் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், கடந்த காலங்களில் விடுபட்டுப்போன வருமானத்தை எந்தவிதப் பயமும் இன்றி சட்டப்பூர்வமாக அறிவிக்க 48 மாதங்கள் அல்லது நான்கு ஆண்டுகள் வரை நீண்ட கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. உதாரணமாக, ஒரு முகவர் கடந்த 2022–23 நிதி ஆண்டில் ஈட்டிய கமிஷன் வருமானத்தைத் தற்செயலாகக் கணக்கில் காட்டத் தவறினால், 2026ம் ஆண்டு வரை அவர் 'அப்டேட்டட் ரிட்டர்ன்' மூலம் அதனைத் திருத்தித் தாக்கல் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த வசதி, வரி ஏய்ப்பு நோக்கம் இல்லாத ஆனால் தவறுதலாக வருமானத்தைத் தரம் பிரிக்காத முகவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். இருப்பினும், இந்தச் சலுகையானது வருமான வரித் துறையின் சோதனை அல்லது வழக்கு நடவடிக்கைக்கு உள்ளானவர்களுக்குப் பொருந்தாது என்பது குறிப்பிடத்தக்கது.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில், இந்த டிஜிட்டல் மற்றும் வரிச் சீர்திருத்தங்கள் ரியல் எஸ்டேட் துறையில் ஒரு புதிய உத்வேகத்தை ஏற்படுத்தியுள்ளன. கமிஷன் தொகையை விரைவாகப் பெறுவது முதல் சிக்கலற்ற சொத்து விற்பனை வரை அனைத்தும் முகவர்களுக்குச் சாதகமாக மாற்றப்பட்டுள்ளன. இத்தகைய வெளிப்படையான நடவடிக்கைகள், முறைசாராத் துறையாகக் கருதப்படும் ரியல் எஸ்டேட் முகவர் தொழிலை ஒரு முறையான வணிகக் கட்டமைப்பிற்குள் கொண்டு வர உதவும் என்று பொருளாதார வல்லுநர்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

# சிட்டா (Chitta) என்றால் என்ன? அதன் முக்கியத்துவம் என்ன?

சிட்டா என்றால் என்ன?

சிட்டா என்பது வருவாய் துறை (Revenue Department) பராமரிக்கும் நில விவரப் பதிவு ஆவணம்.

இதில் குறிப்பாக:

நில உரிமையாளர் பெயர்

Survey Number

நில வகை (நஞ்சை / புஞ்சை / வீட்டு மனை)

பரப்பளவு

கிராமம் / தாலுகா விவரம்

போன்ற தகவல்கள் இடம்பெறும்.

தமிழ்நாட்டில் UDR (Updating Registry) முறையால் சிட்டா மற்றும் அடங்கல் இணைந்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

சிட்டாவின் முக்கியத்துவம்

1. உரிமை ஆதாரம் (Supporting Record)

சிட்டா முழுமையான உரிமை பத்திரம் அல்ல; ஆனால் உரிமையை ஆதரிக்கும் முக்கிய அரசு பதிவு.

2. வங்கி கடன் பெற

வங்கி, நில விவரம் சரிபார்க்க சிட்டா கேட்கும்.

3. விற்பனை / வாங்குதல்

Buyer Title Verification செய்யும் போது சிட்டா சரிபார்க்கப்படும்.


4. நீதிமன்ற வழக்கில்

நில வகை மற்றும் பெயர் பதிவை நிரூபிக்க பயன்படும்.

5. பட்டா மாற்றம் (Patta Transfer)

சிட்டா பதிவுகள் சரியாக இல்லையெனில் மாற்றம் சிரமமாகும்.

Tamil Nadu Patta Passbook Act & பட்டா – நிலப் பதிவுகள் தொடர்பான விதிகள்.



இ நெம்பர் 10 பிரிவு 1-13 —ம் பசலியில் காஞ்சிபுரம் ஜில்லா ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா
29. சேந்தமங்கலம் கிராமத்தில் செட்டில்மெண்டு ஜமாபந்தி நபர்கள் சிட்டா

நெம்பர் 550 நெம்பர்

| வருடமும் விவரங்களும் (1) | புலத்தின் நெம்பரும் உட்பிரிவும் (2) | புஞ்செய் விஸ்தீர்ணம் (3) | | புஞ்செய் தீர்வை (4) | | நஞ்செய் விஸ்தீர்ணம் (5) | | நஞ்செய் தீர்வை (6) | | மொத்தம் தீர்வை (7) | | ஷரா (8) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஹெக்டேர் | ஏர் | ரூ. | பை | ஹெக்டேர் | ஏர் | ரூ. | பை | ரூ. | பை | |
| | 110-1A1 | 0 | 39-0 | 0 | 56 | – | – | – | – | 0 | 56 | |
| | | 0 | 390 | 0 | 56 | – | – | – | – | 0 | 56 | |

27-3-15
Village Administrative Officer &
Birth and Death Registrar,
Village.
Sriperumbudur

Tamil Nadu Land Revenue Act & வருவாய் பதிவுகள் பராமரிப்பு.

சொத்து வைத்திருப்பவர் சிட்டா இல்லாவிட்டால் என்ன ஆகும்?

உரிமை முழுமையாக ரத்து ஆகாது.

ஆனால் உரிமை நிரூபிக்க சிரமம் ஏற்படும்.

வங்கி கடன் பெற முடியாமல் போகலாம்.

விற்பனை செய்யும்போது சந்தேகம் எழலாம்.

நீதிமன்ற வழக்கில் எதிர் தரப்பு சிக்கல் உருவாக்கலாம்.

முக்கியம்:

Sale Deed தான் பிரதான உரிமை ஆவணம்.

சிட்டா என்பது அரசு வருவாய் பதிவு மட்டுமே; அது “Title Document” அல்ல.

முடிவு

சிட்டா இருப்பது நில உரிமைக்கு ஆதார பலம்.

இல்லையெனில் உடனடியாக Taluk Office / Online மூலம் விண்ணப்பித்து புதுப்பிக்க வேண்டும்.

Patta, FMB, Tax Receipt உடன் இணைந்து பராமரிக்க வேண்டும்.





# தோழர் நல்லகண்ணு உடலுக்கு 72 குண்டுகள் முழங்க தமிழக அரசு மரியாதை

மறைந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லகண்ணு உடலுக்கு 72 துப்பாக்கி குண்டுகள் முழங்க அரசு சார்பில் முழு மரியாதை செலுத்தப்பட்டது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் மற்றும் சுதந்திர போராட்ட வீரருமான நல்லகண்ணு நேற்று வயது மூப்பின் காரணமாக உயிரிழந்தார். அவருக்கு வயது 101 . சென்னை தியாகராய நகரில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலகத்தில் அவரது உடல் பொதுமக்கள் அஞ் சலிக்காக வைக்கப்பட்டது. பின்னர், அரசியல் கட்சி தலைவர்கள், திரையுலகினர் என அனைவரும் நல்லகண்ணு உடலுக்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

இதனைத் தொடர்ந்து, மலர் வளையம் வைத்து மறைந்த நல்லகண்ணு உடலுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அஞ்சலி செலுத்தினார். பின்னர், 72 குண்டுகள் முழங்க 24 காவலர்கள் 3 முறை வானத்தை நோக்கி சுட்டனர். முதல்வர் ஸ்டாலின் தலைமையில் தலைவர்கள் நல்லகண்ணுக்கு 'வீர வணக்கம்' செலுத்தினர்.

நல்லகண்ணு இறப்புக்கு பிறகு தன்னுடைய உடலை மருத்துவமனைக்கு தானமாக வழங்க விருப்பம் தெரி வித்திருந்தார்.

இந்நிலையில், நல்லகண்ணுவின் உடல் அவரது விருப்பப்படி சென்னை சென்ட்ரலில் உள்ள ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு தானமாக ஒப்படைக்கப்படுகிறது. நல்லகண்ணுவின் இறுதி ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்று வீரவணக்கம் செலுத்தி அவருக்கு பிரியாவிடை கொடுத்தனர்.

# "உதயநிதியை முதல்வராக்க திமுக இந்தத் தேர்தலை சந்திக்கிறது"




"என்டிஏவில் தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை இன்னும் தொடங்கவில்லை. தேர்தல் தேதி அறிவித்த பிறகே தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை தொடங்கும். உதயநிதியை முதல்வராக்க திமுக இந்தத் தேர்தலை சந்திக்கிறது" என பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் இன்று செய்தியாளர்களிடம் கூறும்போது, "கூட்டணி பேச்சுவார்த்தை முன்பே முடிந்துவிட்டது. தற்போது இரு கட்சி தலைவர்கள் மட்டும் சந்தித்துள்ளனர். இபிஎஸ்ஸின் டெல்லி பயணம் குறித்து அமித் ஷாவுக்கும், அண்ணன் இபிஎஸ்ஸுக்கும் மட்டுமே தெரியும். என்டிஏவில் தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை இன்னும் தொடங்கவில்லை. தேர்தல் தேதி அறிவித்த பிறகே தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை தொடங்கும்.

அனைத்து வகையிலும் தமிழகம் இன்று தாழ்ந்து போயுள்ளது. கையில் புத்தகத்தை பிடிக்க வேண்டிய மாணவர்கள் அனைவரும் கஞ்சாவை வைத்துள்ளனர். பெண்கள் சுதந்திரமாக நடமாட முடியவில்லை. 50% பெண்களுக்கு பாதுகாப்பில்லாத மாநிலமாக தமிழகம் உள்ளது என தேசிய மகளிர் ஆணையம் தெரிவித்துள்ளது. இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் தற்கொலைகளின் எண்ணிக்கை அதிகம்.

துணை முதல்வர் உதயநிதியை முதல்வராக்க வேண்டுமென அவர்கள் இந்தத் தேர்தலை சந்திக்க இருக்கிறார்கள். அதிகார பலம், பண பலம் என அனைத்தையும் குவித்து எல்லா இடங்களிலும் வைத்திருக்கிறார்கள். அதைவிட மக்கள் பலம்தான் பெரியது என இந்த தேர்தல் நிருபிக்கும்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழக ரயில் திட்டங்களுக்கான நிதி 9 மடங்கு அதிகரிப்பு



''தமிழக ரயில் திட்டத்துக்கான நிதி ஒதுக்கீடு 9 மடங்கு அதிகரித்துள்ளது. 2009 முதல் 2014 வரை ரூ.880 கோடியாக இருந்த நிதி ஒதுக்கீடு 2026 27 ஆண்டில் ரூ.7600 கோடியாக உயர்ந்தது'' என பிரதமர் மோடி பேசினார்.

தமிழகத்தில் ரூ.4,400 கோடி மதிப்புள்ள மரக்காணம் புதுச்சேரி நான்கு வழிச்சாலை, பரமக்குடி ராமநாதபுரம் பிரிவு நான்கு வழிச்சாலை திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டு விழா, பொம்மிடி, காரைக்குடி, மணப்பாறை, மொரப்பூர், பொள்ளாச்சி, சோழவந்தான், ஸ்ரீவில்லித்புத்தூர் மற்றும் திருவாரூர் அம்ரித் ரயில் நிலையங்கள் திறப்பு மற்றும் சென்னை கடற்கரை சென்னை எழும்பூர் 4வது ரயில் வழித்திட்டம் நாட்டுக்கு அர்பணிக்கும் விழாக்கள் மதுரை விமான நிலைய வளாகத்தில் இன்று நடைபெற்றன.

இத்திட்டங்களை தொடங்கி வைத்துப் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, ''புனிதமான மதுரை மாநகருக்கு வருவதை பெரும் கவுரவமாக உணர்கிறேன். மதுரையை ஆட்சி செய்யும் மீனாட்சியம்மனுக்கும், சுந்தரேஸ்வருக்கும் தலை வணங்குகிறேன். இந்த விழா தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் முக்கியமானது. இன்று ரூ.4,500 கோடிக்கு மேல் மதிப்புள்ள திட்டங்களை தொடங்கி வைத்துள்ளேன்.

இத்திட்டங்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும், விவசாயிகள், சுற்றுலா பயணிகள், புனித யாத்திரை மேற்கொள்பவர்களுக்கு அதிக பயனளிக்கும். இதுபோன்ற உயர்தர கட்டமைப்புகளை உருவாக்குவது மக்களுக்கு அதிகார பங்களிப்பை அளிப்பதாகும்.

கடந்த 12 ஆண்டுகளாக தமிழக நெடுஞ் சாலை வளர்ச்சிக்கு மத்திய அரசு அதிக நிதி ஒதுக்கி வருகிறது. தமிழகத்தில் 2014 முதல்

4,000 கிலோ மீட்டர் தூரத்துக்கு புதிய சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இன்று இரண்டு பெரிய தேசிய நெடுஞ்சாலை திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. மரக்காணம் புதுச்சேரி நான்கு வழிச்சாலை திட்டத்துக்கு ரூ.2,100 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தால் தமிழ்நாடு புதுச்சேரி கடற்கரைப் பகுதியில் சுற்றுலா, வர்த்தகம், பொருளாதாரம் பலமாகும். பரமக்குடி ராமேஸ்வரம் நான்கு வழிச்சாலை திட்டத்துக்கு ரூ.1,800 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தச் சாலையால் ராமேஸ்வரம் தனுஷ்கோடி பகுதி முன்னேறும். ராமேஸ்வரத்துக்கு புனித பயணம் மேற்கொள்பவர்கள், வேளாண் உற்பத்தி பொருட்களை சந்தைக்கு எடுத்துச் செல்லும் விவசாயிகள், கடல்சார் பொருட்களின் போக்குவரத்தையும் மேம்படுத்தும்.

கடந்த 10 ஆண்டுகளில் இந்திய ரயில்வேத்துறை பெரும் மாற்றம் கண்டுள்ளது. ரயில் போக்குவரத்து, நவீன திறன் மிகுந்த மக்கள் சார்ந்த போக்குவரத்தாக மாறியுள்ளது. இந்த மாற்றம் தமிழகத்தில் நன்கு தெரிகிறது. தமிழக ரயில் திட்டத்துக்கான நிதி ஒதுக்கீடு பாஜக ஆட்சிக்கு வந்த பிறகு 9 மடங்கு அதிகரித்துள்ளது. 2009 முதல் 2014 வரை நிதி ஒதுக்கீடு ரூ.880 கோடியாக இருந்தது. 2026 2027 நிதியாண்டில் இது ரூ.7600 கோடியாக உயர்ந்தது.

தமிழ்நாட்டில் 1300 கிலோ மீட்டருக்கு அதிகமாக புதிய ரயில் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. 97 சதவீத மின்மயமாக்கல் பணிகள் முடிந்துள்ளன. நூற்றுக்கணக்கான மேம்பாலங்கள், சுரங்கப்பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. கடந்தாண்டு ராமேஸ்வரத்தில் புதிய பாம்பன் பாலம் திறக்கப்பட்டது. இது இந்தியாவின் முதல் செங்குத்து தூக்கு கடல் பாலமாகும். இது நமது பொறியியல் திறனின் அடையாளமாகும். இப்பாலம் சுற்றுலா பயணிகளை அதிகளவில் ஈர்த்து வருகிறது.

தமிழகத்தில் தற்போது 9 வந்தே பாரத், 9 அம்ரித் பாரத் ரயில்கள் சேவையாற்றி வருகின்றன. இந்த ரயில்களின் பெட்டிகள் சென்னையில் தயாரிக்கப்படுகின்றன. இதனால் ஏராளமான இளைஞர்கள் வேலைவாய்ப்பை பெற்று வருகின்றனர். அம்ரித் திட்டத்தில் 77 ரயில் நிலையங்கள் நவீனப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த ரயில் நிலையங்களில் மக்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

கும்பகோணம், ஏற்காடு, வேலூர் ஆகாசவாணி புதிய பண்பலை அஞ்சல் நிலையங்கள் மக்கள் சேவைக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. தமிழக உள்கட்டமைப்புக்கான நிதி ஒதுக்கீடு கடந்த 10 ஆண்டுகளை ஒப்பிடுகையில் 3 மடங்கு அதிகரித்துள்ளது. 2026 மத்திய பட்ஜெட்டில் தமிழகத்துக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. அந்த பட்ஜெட்டில் சென்னை பெங்களூர், சென்னை ஹைதராபாத் புல்லட் ரயில் திட்டம் அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் இப்பகுதிகளின் பொருளாதாரத்தை முழுமையாக மேம்படுத்தும்.

தமிழ்நாடு வளமான வரலாறு மற்றும் மரபுக்கு சொந்தமான மாநிலம். ஆதிச்சநல்லூர் போன்ற வரலாற்று சிறப்புமிக்க இடங்கள் உலகளவில் வரலாற்று சிறப்பு மிக்க இடமாக மாற்றப்படும். புலிகாட் ஏரி, பொதிகை மலைப்பகுதி ஆகியவற்றில் சுற்றுச்சூழல் முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படும். இதனால் வேலைவாய்ப்புகள் பெருகும். அதே நேரத்தில் இயற்கை வளம் பாதுகாக்கப்படும்.

நாடு முழுவதும் 200 தொழில்துறை தொகுப்புகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இங்கு தயாரிப்புகள் ஊக்கப்படுத்தப்படும். இதில் தமிழ்நாட்டிலும் பல்வேறு தொழிற்சாலைகள் உள்ளன. இதனால் தமிழக இளைஞர்கள் பலனடைவர்.

2047க்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற உணர்வில் ஒவ்வொரு இந்தியரும் உள்ளனர். நாட்டின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் தமிழ்நாடு முக்கிய பங்காற்றும். நம் அனைவரின் மொத்த இலக்கும் வளர்ச்சியடைந்த இந்தியா மற்றும் வளர்ச்சிடைந்த தமிழகத்தை உருவாக்குவதாக இருக்க வேண்டும். அனைவரையும் உள்ளடக்கிய மாநிலத்தின் முன்னேற்றத்தை உறுதி செய்வதில் மத்திய அரசு முழு அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறது'' என்று தெரிவித்தார்.

முன்னதாக மத்திய அமைச்சர் எல்.முருகன் பேசுகையில், ''பிரதமர் மோடி தமிழக மக்கள், தமிழ் மொழி, தமிழ் கலாச்சாரத்தின் மீது அதிக பற்று வைத்துள்ளார். இதனால் தான் உலகம் முழுவதும் திருக்குறள் கலாச்சார மையம் திறந்து வருகிறார். திருக்குறளை 35க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழி பெயர்த்துள்ளார். இதுவரை தமிழகத்துக்கு ரூ.12 லட்சம் கோடி நிதி வழங்கியுள்ளார். பிரதமர் மோடி தமிழகம் வரும் போதெல்லாம் பல்வேறு நலத்திட்டங்களை தொடங்கி வைத்து வருகிறார். இன்று ரூ.4,500 கோடி நலத்திட்டங்களை தொடங்கி வைத்துள்ளார்'' என தெரிவித்தார்.

தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, தமிழக பொதுப்பணித்துறை அமைச்சர் ஏ.வா.வேலு, அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# மதிமுக தனிச் சின்னத்தில் தான் போட்டியிடும்



"மதிமுக தனிச்சின்னத்தில் தான் போட்டியிடும் என எங்கள் அவைத்தலைவர் சொல்லியுள்ளார். அதுதான் எங்கள் நிலைப்பாடு" என அக்கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்தார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களிடம் பேசிய மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, " இன்று மூன்று கோரிக்கைகளை முதல்வர் ஸ்டாலினிடம் நேரடியாக எடுத்துரைப்பதற்காக அவரை சந்தித்தேன். காயிதே மில்லத் பெயரால் ஒரு பல்கலைக்கழகம் அமைப்பதை திமுக தேர்தல் அறிக்கையில் சேர்க்க வலியுறுத்தினேன். உடனே அக்கோரிக்கையை தேர்தல் அறிக்கையில் சேர்ப்பதாக சொன்னார்கள்.

இரண்டாவது, வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ளவர்களுக்கும், விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் கொடுப்பதை தடுப்பதற்கு மத்திய அரசு முயற்சி செய்கிறது. எனவே, சூரிய சக்தி மூலம் இலவச மின்சாரம் வழங்க முடிவெடுக்க கோரிக்கை வைத்தேன். அதனையும் திமுக தேர்தல் அறிக்கையில் சேர்ப்பதாக சொன்னார்கள்.

மூன்றாவதாக, வீரபாண்டிய கட்டபொம்மனின் முன்னோர்கள் திருப்பரங்குன்றம் கோயிலில் 500 ஆண்டுகளுக்கும் மேலாக கட்டபொம்மன் சத்திரம் அமைத்து 9வது மண்டகபடி செய்துவந்தனர். அவர்களின் நேரடி வாரிசு பீமராசா என்பவரிடம் முறைகேடாக கையெழுத்து பெற்று இன்னொரு குடும்பம், அந்த சத்திரம் எங்களுடையது என்று அறநிலையத்துறை மூலம் சொல்லியுள்ளனர். இதில் உரிய நடவடிக்கை எடுக்க முதல்வரிடம் கோரிக்கை வைத்தேன். அமைச்சர் சேகர்பாபுவிடம் இந்த பிரச்சினையை சொல்லி வேண்டிய ஏற்பாடுகளை செய்யச் சொல்லியுள்ளார்.

தொகுதிப் பங்கீடு பற்றி முதல்வரிடம் எதுவும் பேசவில்லை. தொகுதிப் பங்கீடு குறித்து மதிமுக குழு முதற்சுற்று பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. மீண்டும் இரண்டாவது சுற்றுக்கு அழைப்பு வந்தால் பேச்சுவார்த்தை நடத்தப்படும். பேச்சுவார்த்தைக்கு பின்னரே இதுபற்றி பேச முடியும். மதிமுக தனிச்சின்னத்தில் தான் போட்டியிடும் என எங்கள் அவைத்தலைவர் சொல்லியுள்ளார். அதுதான் எங்களின் நிலைப்பாடு.

மோடி எத்தனை முறை காவடி தூக்கினாலும், பாஜக தமிழகத்தில் காலூன்ற முடியாது. பாஜகவால் தமிழகத்தை ஏமாற்ற முடியாது" என்றார்.

# மலைப்பகுதிகளில் கட்டிட அனுமதி: தமிழக அரசின் அதிரடி தளர்வுகள்




தமிழகத்தின் மலைவாழ் மக்கள் மற்றும் கட்டுமானத் துறையினரின் சிரமங்களைக் குறைக்கும் வகையில், மலைப்பகுதிகளில் கட்டிட அனுமதி பெறுவதற்கான நடைமுறைகளை வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை எளிமையாக்கியுள்ளது. இதற்கான அரசாணையைத் தமிழக அரசு பிப்ரவரி 24, 2026 அன்று வெளியிட்டுள்ளது.

முக்கிய மாற்றங்கள் மற்றும் தளர்வுகள்:

1. கோட்டாட்சியர் (RDO) தடையில்லா சான்று இனி தேவையில்லை:

இதுவரை மலைப்பகுதிகளில் எவ்வித கட்டுமான பணிகளை மேற்கொள்ள வேண்டுமானாலும், வருவாய் கோட்டாட்சியரிடம் (RDO) தடையில்லா சான்றிதழ் (NOC) பெறுவது கட்டாயமாக இருந்தது. இனி ஆன்லைன் மூலமாகவே வருவாய் விவரங்களைச் சரிபார்க்க முடியும் என்பதால், இந்தச் சான்றிதழ் பெறுவதிலிருந்து முழு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

2. நில வகை மாற்றம் (Change of Land Use) எளிமை:

மலைப்பகுதிகளில் நில வகை மாற்றம் செய்வதற்குப் புதிய விதிகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன:

* நகர்ப்புறங்களில்: 2 ஹெக்டேர் வரை.

* கிராமப்புறங்களில்: 4 ஹெக்டேர் வரை.

இனி சாதாரண சமவெளி பகுதிகளில்



பின்பற்றப்படும் நடைமுறைகளைப் பின்பற்றியே இந்த நில வகை மாற்றங்களை மேற்கொள்ளலாம். இதற்கு முன் இருந்த சிக்கலான மலைப்பகுதி பாதுகாப்பு குழு (பிகிசிகி) ஒப்புதல் தேவைப்படாது.

3. ஒருமுறை சான்றிதழ் பெற்றால் போதும்:

நில வகை மாற்றத்தின் போது ஏற்கனவே வனத்துறை, புவியியல் மற்றும் சுரங்கத்துறை போன்ற துறைகளிடம் தடையில்லா சான்று பெற்றிருந்தால், மீண்டும் மனை அங்கீகாரம் (Layout Approval) அல்லது கட்டிட அனுமதி பெறும் போது அதே சான்றிதழ்களைக் காட்ட வேண்டிய அவசியமில்லை.

4. பயன்பாட்டிற்கு வரும் பகுதிகள்:

இந்தத் தளர்வுகள் ஊட்டி, கொடைக்கானல், வால்பாறை, ஏலகிரி, ஏற்காடு, மணிமுத்தாறு மற்றும் தேனி மாவட்டத்தின் ஹைவேவிஸ் போன்ற முக்கிய மலைவாசஸ்தலங்களுக்குப் பொருந்தும்.

இயற்கை ஆர்வலர்களின் கவலை: ஒரு பார்வை

அரசு இந்தத் தளர்வுகளை "நிர்வாகச் சீர்திருத்தம்" மற்றும் "மக்களுக்கான எளிமை" என்று கூறினாலும், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மத்தியில் இது சில அச்சங்களை ஏற்படுத்தியுள்ளது.

* கட்டுப்பாடற்ற கட்டுமானம்: அனுமதி நடைமுறைகள் எளிமையாக்கப்படும் போது, போதிய ஆய்வுகள் இன்றி அதிகப்படியான கட்டிடங்கள் உருவாக வாய்ப்புள்ளதாகக் கருதப்படுகிறது.

* மண்ணரிப்பு மற்றும் நிலச்சரிவு: மலைப்பகுதிகளில் புவியியல் காரணிகளைக் கருத்தில் கொள்ளாமல் கட்டுமானங்கள் அதிகரித்தால், அது இயற்கைச் சீற்றங்களுக்கு வழிவகுக்கும் என்பது சமூக வலைதளங்களில் பகிரப்படும் முக்கிய கவலையாக உள்ளது.

இருப்பினும், வனத்துறை மற்றும் புவியியல்/சுரங்கத்துறை ஆகிய துறைகளின் தடையில்லா சான்றிதழ்கள் இப்போதும் சில குறிப்பிட்ட வகை நிலங்களுக்குக் கட்டாயமாக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

"நிர்வாகத் தாமதத்தைக் குறைப்பது வளர்ச்சிக்கு உதவும் என்றாலும், மலைகளின் பாதுகாப்பை உறுதி செய்வது அரசின் கடமை" என்பதே பொதுமக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.




■ மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.இரா.இராஜேந்திரன் அவர்கள் சேலம் மாவட்டம், கொண்டப்பநாயக்கன்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகளை திறந்து வைத்து, பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு புத்தக பைகளை வழங்கினார்கள். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, இ.ஆ.ப., சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.டி.எம்.செல்வகணபதி, சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.இரா.அருள் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



■ மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.இரா.இராஜேந்திரன் அவர்கள் சேலம் மாவட்டம், கொண்டப்பநாயக்கன்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகளை திறந்து வைத்தார்கள். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, இ.ஆ.ப., சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.டி.எம்.செல்வகணபதி, சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.இரா.அருள் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



■ கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.அ.பூங்கோதை, பத்மநாபபுரம் சார் ஆட்சியர் திரு.வினய்குமார் மீனா, இ.ஆ.ப., உட்பட பலர் உள்ளார்கள்.



■ கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக குறள் கூட்டரங்கில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.ஸ்டாலின், இ.கா.ப., அவர்கள் முன்னிலையில் மாநிலங்களின் எல்லை பகிரும் மாவட்டங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு கூட்டம் நடைபெற்றது. உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.அ.பூங்கோதை, பத்மநாபபுரம் சார் ஆட்சியர் திரு.வினய்குமார் மீனா, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.சுகிதா உட்பட பலர் உள்ளார்கள்.





# முதல்வர் ஸ்டாலின் தூக்கத்தில் இருந்து எழுவாரா?’

**நாங்குநேரி கொலை சம்பவம் தமிழகத்தில் பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கும் நிலையில், அதிமுக பொதுச்செயலாளர் இபிஎஸ், தவெக தலைவர் விஜய் ஆகியோர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.**

எடப்பாடி பழனிசாமி: நாங்குநேரி அருகே பெரும்பட்டு கிராமத்தில் அரங்கேறியுள்ள கொடூரம் ஏற்க முடியாத பெருங்குற்றம். பட்டியலின மக்கள் அதிகம் வசிக்கும் அந்த கிராமத்திற்குள் புகுந்த 9 பேர் கொண்ட மர்மகும்பல், அங்குள்ள தேநீர் கடை மீது பெட்ரோல் குண்டு வீசி நடத்திய கொலைவெறித் தாக்குதலில் இருவர் பரிதாபமாக உயிரிழந்து, 6 பேர் படுகாயத்துடன் சிகிச்சை பெற்று வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சட்டம் ஒழுங்கை ஒரு பொருட்டாக கருதாமல் விளம்பர ஆட்சி நடத்திய திமுக அரசின் அலட்சிய போக்கின் விளைவு தான் இந்த கொடூரக் கொலைகள். இது தங்கள் சமூகத்தைக் குறிவைத்து நடந்த தாக்குதல் எனவும், தங்களுக்கு பாதுகாப்பு இல்லை எனவும் அச்சத்துடன் போராடி வருகின்றனர் அக்கிராமத்தைச் சேர்ந்த பட்டியலின மக்கள். இதே நாங்குநேரி தொடங்கி, தென் மாவட்டங்களில் தொடர்ந்து நடக்கும் சமூக ரீதியான மோதல்களை தடுக்க என்ன நடவடிக்கை எடுத்தது திமுக அரசு? வேடிக்கை மட்டும் தானே பார்த்துக்கொண்டு இருந்தது?

தொடர்ந்து இப்பகுதியை பதற்ற நிலையிலேயே வைத்திருக்க வேண்டுமென்பது தான் திமுக அரசின்

# இபிஎஸ்., விஜய் கடும் கண்டனம்





எண்ணமா? தேர்தல் நேர அறுவடைக்கு சமூக மோதல்களை வளர்த்து விடுகிறதா திமுக? என்ற கேள்விகளும் சந்தேகங்களும் மக்களிடையே எழுகிறது. வாய்கிழிய மேடைகளில் சமத்துவம் என்று பேசும் திமுக, தனது ஆட்சியில் சமூக மோதல்களைக் கட்டுப்படுத்தாமல் வேடிக்கை பார்ப்பது வெட்கக்கேடானது; கடும் கண்டனத்திற்குரியது. பெரும்பட்டு தாக்குதலில் ஈடுபட்ட குற்றவாளிகள் அனைவர் மீதும் மிகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஸ்டாலின் மாடல் திமுக அரசை வலியுறுத்துகிறோம்.

விஜய்: திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி அருகே பெரும்பத்து கிராமத்தில் நேற்றிரவு இருசக்கர வாகனங்களில் சென்ற 9 பேர் கொண்ட கும்பல், சாலையில் சென்றவர்கள், டீக்கடை அருகே நின்றவர்கள் மீது ஆயுதங்களால் சரமாரியாகத் தாக்கியதில் இருவர் உயிரிழந்தனர். 5 பேர் வெட்டுக் காயம் அடைந்தனர் என்று வெளியான செய்தி அதிர்ச்சி அளிக்கிறது. இந்தக் கொலைவெறித் தாக்குதல், கடும் கண்டனத்திற்கு உரியது. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, படுகாயம் அடைந்தவர்கள் விரைந்து குணமடைய விழைகிறேன்.

உலக நாடுகளுடன் போட்டி போடும் ஓர் ஆட்சியில் பொதுமக்களின் உயிருக்கு உத்தரவாதம் எங்கே? இந்தியாவின் டாப் மாநிலத்தில் காவல் துறைக்குச் சட்டம் ஒழுங்கு டிஜிபி எங்கே? நம்பர்1 மாநிலம் என்று தம்பட்டம் அடித்துக்கொள்ளும் ஆட்சியின் சட்டம் ஒழுங்கு லட்சணம் இதுதானா? போதைக் கும்பல் சுதந்திரமாக வன்முறை நிகழ்த்த இடம் தந்த பொறுப்புமிக்க ஆட்சி இதுதானா?

பொதுமக்கள் ஒவ்வொரு நாளும் புலம்பித் தவித்துக் கோபத்தில் கொந்தளித்துக் கேள்வி எழுப்பி வருகின்றனர். ஆட்சியே முடியப் போகிறது. இப்போதாவது காவல் துறையைக் கையில் வைத்திருக்கும் முதல்வர் தூக்கத்தில் இருந்து எழுவாரா? மக்கள் நலன்களை, அவர்தம் பாதுகாப்பைத் துளியும் யோசிக்காத இந்தத் திமுக ஆட்சி, வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் தூக்கி எறியப்படுவது உறுதி உறுதி உறுதி.

# “விஜய் மனைவி விவாகரத்து கோரியதை அரசியல் ஆக்கக் கூடாது”



சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கூறியது: “தேர்தலுக்கு பாஜக தயாராக உள்ளது. மதுரையில் பிரதமர் மோடி கலந்து கொள்ளும் பொதுக் கூட்டத்தில் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கலந்து கொள்கின்றனர். பிரதமர் மோடி தமிழகம் வருவது தேர்தலுக்காக மட்டுமல்ல. தமிழக மக்கள் மீது பிரதமருக்கு அன்பு, பாசம் உள்ளது.

ஓபிஎஸ் மீண்டும் அதிமுகவில் சேர இடம் கிடைக்கவில்லை. அதனால் அவருக்கு லாபம் கிடைக்கும் இடத்துக்கு சென்றுள்ளார். இன்னும் ஒரு வாரத்துக்கு பிறகு, பாஜக போட்டியிடும் தெ□குதிகள் விவரம் தெரியவரும்.

விஜய் மனைவி விவாகரத்து கோரியது, அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கை. அதை அரசியல் ஆக்கக் கூடாது. கணவன் மனைவி இடையே உள்ள பிரச்சினைகளை நாம் பேசுவதற்கு எந்த உரிமையும் இல்லை.

காங்கிரஸ் கட்சி தனித்து நிற்பதற்கு தகுதியும் தைரியமும் கிடையாது. அவர்கள் திமுகவிடமும் விஜய்யிடமும் பேரம் பேசுகிறார்கள். அவர்களுக்கு யாரிடம் இருந்து லாபம் அதிகமாக வருகிறதோ அங்கு செல்வார்கள். இனி மத்தியில் காங்கிரஸ் ஒருபோதும் ஆட்சியைப் பிடிக்க முடியாது.

தற்போது தான், காங்கிரஸுக்கு ரோஷம் வந்து, தமிழகத்தில் ஆட்சியில் பங்கு வேண்டும் என கேட்கிறது. ஆட்சியில் பங்கு தரமாட்டோம் என்று திமுக கூறியும் காங்கிரஸுக்கு ரோஷம் வரவில்லை. சூடு சொரணை எதுவுமே, காங்கிரஸ் கட்சிக்காரர்களுக்கு கிடையாது.

காங்கிரஸ் கட்சிக்கு, திராணி இருந்தால், இந்த தேர்தலில் தனியாக நிற்கட்டும். பாஜகவை தயவுசெய்து காங்கிரஸோடு ஒப்பிட வேண்டாம். பாஜகவுக்கு உள்ள தைரியம், தமிழகத்தில் எந்த கட்சிக்கும் வராது" இவ்வாறு அவர் கூறினார்.

# “இந்தித் திணிப்பு வெறியில் எல்லை மீறுகிறது பாஜக”

**புதிதாக கட்டி முடிக்கப்பட்டுள்ள திருச்சி மண்டல ரயில்வே அலுவலகத்தின் நுழைவு வாயிலுக்கு கர்தவ்ய த்வார் என்று இந்தியில் பெயர் வைக்கப்பட்டுள்ளதற்கு முதல்வர் ஸ்டாலின் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**



இது குறித்து அவர் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், “இந்தித் திணிப்பு வெறியில் எல்லை மீறிச் சென்று கொண்டிருக்கிறது பாஜக. 'மொழி ஒன்று வரிவடிவம் மூன்று' எனும் வகையில் இந்திப் பெயரையே தமிழ், ஆங்கிலத்திலும் எழுதி வைக்கும் இழிவான இந்தி திணிப்பு செயலில் இறங்கியுள்ளது ஒன்றிய பாஜக அரசு. திருச்சி மண்டல இரயில்வே அலுவலக நுழைவு வாயிலில் 'கர்தவ்ய த்வார்' என எழுதி வைத்துள்ளனர்.

வருங்கால வைப்பு நிதி அலுவலகங்களில் (ணிறிதிளி) ஏற்கெனவே 'பவிஷ்ய நிதி பவன்' என்ற பெயரைத் திணித்து விட்டனர்.

குற்றவியல் சட்டங்களுக்கும் சமஸ்கிருதப் பெயரைத்தான் ஆங்கில வரிவடிவத்தில் எழுதுகின்றனர்.

ஒன்றிய நீர்வளத்துறை அமைச்சகத்தின் பெயர் 'ஜல் சக்தி' ஆகிவிட்டது.

மகாத்மா காந்தி நூறு நாள் வேலைத் திட்டப் பெயர் மாற்றத்திலும் இதே வேலையைத்தான் காட்டினார்கள்.

கொட்டமும், ஆணவமும் கூடிக்கொண்டே போகிறது. தமிழர்களின் சுயமரியாதையைச் சீண்டிப் பார்க்கும் இவர்களுக்குச் சரியான பாடம் புகட்ட வேண்டும்.

தமிழ், ஆங்கிலப் பெயர்களிலும் இந்தியைத் திணிக்கும் முயற்சியைக் கைவிட்டு, உடனடியாக அங்கு சரியான தமிழ்ப் பெயர்கள் இடம்பெற வேண்டும். இல்லையென்றால் தமிழர்களின் சூட்டை ஒன்றிய பாஜக அரசு உணர வேண்டி இருக்கும் என்று எச்சரிக்கை விடுக்கிறேன்” என்று அவர் தெரிவித்துள்ளார்.

# ஆங்காங்கே குண்டுகள், ஏவுகணைகள் வெடிக்கும் சத்தம்: துபாயில் இருந்து சென்னை திரும்பியவர்கள் பேட்டி



துபாயில் கணவருடன் வசித்து வந்த சென்னை பூந்தமல்லியை சேர்ந்த வைஜெயந்தி: இந்திய தூதரகம் மூலம் சென்னை வந்து சேர்ந்தது மகிழ்ச்சியாக உள்ளது. என்னுடைய கணவர் துபாயில் இருக்கிறார்.

அவரும் அடுத்த விமானத்தில், இங்கு வந்துவிடுவார். துபாயில் வீடுகளின் மேலேயே, விமானங்கள் பறந்து கொண்டு, பயங்கரமான சத்தமாக இருந்தது. 3 நாட்களாக இரவில் தூங்க முடியாமல் தவித்தோம். தற்போது பத்திரமாக வந்து சேர்ந்துவிட்டோம்.

துபாய் விமான நிலையத்தில் எந்தப் பகுதியில் தாக்குதல் நடந்தது என்று தெரியவில்லை. ஆனால் பதற்றமாகவும், பரபரப்பாகவும் இருந்தது. மின்சாரத்தை தடை செய்திருந்தார்கள். நாங்கள் இருளிலேயே தான், தவித்துக் கொண்டிருந்தோம். 3 நாட்களுக்கு பிறகு விமானத்தில் அமர்ந்ததும், நிம்மதியடைந்தோம்.

துபாய்க்கு சுற்றுலா சென்று சிக்கிய கோயம்பேட்டை சேர்ந்த கார்த்திக்: குடும்பத்துடன் துபாய்க்கு சுற்றுலா சென்றோம். கடந்த 28ம் தேதி சென்னைக்கு திரும்ப, துபாயிலிருந்து விமானத்தில் டிக்கெட் முன் பதிவு செய்திருந்தோம்.

அன்று மாலை, துபாய் விமான நிலையத்துக்கு வந்தபோது, போர் காரணமாக விமானம் ரத்து செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர். இதனால் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தோம். பின்னர், துபாய் விமான நிலையத்துக்கு அருகே உள்ள ஒரு ஓட்டலில் தங்கினோம்.

அன்று இரவு முழுவதும் போர் விமானங்கள் பறந்து கொண்டிருந்தன. ஆங்காங்கே குண்டுகள், ஏவுகணைகள் வெடிக்கும் சத்தம் அதிகமாகக் கேட்டது. இதனால் நாங்கள் மிகுந்த அச்சம் அடைந்தோம்.

சென்னை திரும்ப ஒரு வாரம் ஆகும் என்று நினைத்தோம். அதனால், துபாயிலிருந்து மஸ்கட் செல்ல திட்டமிட்டோம். அப்போது தான் எமிரேட்ஸ் விமானம் சென்னைக்கு புறப்படுவதாக அறிவிப்பு வந்தது. அந்த விமானத்தில் நாங்கள் சென்னைக்கு வந்துவிட்டோம்.

விமானத்தில் எங்களை நன்றாக கவனித்துக் கொண்டனர். சுற்றுலா சென்ற நாங்கள் போர் சூழலில் சிக்கியது மிகவும் பயமாக இருந்தது. ஒரு வழியாக பத்திரமாக சென்னைக்கு திரும்பிவிட்டோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

Printed by A.MOURIYAN and Published by A.MOURIYAN on behalf of MAKKAL VISARANAI, Tamil Monthly and Printed at J.M. PROCESS, No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002.
And Published at No.7/13, Ponmanachemmal Street, M.G.R Nagar, Kalaignar Karunanidhi Nagar, Chennai - 600078. Editor: A.MOURIYAN.


ஓம் பால அம்பிகையே நமக !
உ
ஓம் சிவ சக்தியே நமக !!
வேலாதிலங்க்ய கருணே விபு தேந்த்ர வந்த்யே
லீலா விநிர்மித சராசரஹ்ருந்நிவாஸே
மாலா கிரீட மணி குண்டல மண்டி தாங்கே
பாலாம்பிகே மயிவிதேஹி க்ருபா கடாக்ஷம்
அருள்மிகு வாலை அம்மா
ஸ்ரீ அருள்மிகு வாலை அம்மா பிரபஞ்சம் பவுண்டேஷன்
எண். 13/1, 67வது தெரு, ஆர்.வி. நகர், ஜாபர்கான்பேட்டை,
சென்னை – 600 083.
மாதாமாதம் ஒவ்வொரு பௌர்ணமிக்கும்
அன்னதர்மம் வழங்க்கப்படுகிறது.
பக்தர்களும்,பொதுமக்களும் கலந்து
கொள்ளுமாறு வேண்டுகிறோம்.
தர்மம் தலைகாக்கும்
அன்னதர்மம்
இப்படிக்கு
ஸ்ரீ அருள்மிகு வாலை அம்மா
பிரபஞ்சம் பவுண்டேஷன்
9841837847, 8531969163


தண்டு
வடத்தில் வலியா ?
முதுகு வலி, மூட்டு வலி, கழுத்து வலி
போன்றவற்றுக்கு நிரந்தர தீர்வு
அனைத்து சிகிச்சை முறைகளும் அக்கு பஞ்சர் முறையாக
படித்து பயிற்சி பெற்ற சிகிச்சையாளர்களை
கொண்டு வழங்கப்படுகிறது.
GLOW ACUPUNCTURE CENTRE
CLASSICAL ACUPUNCTURE SCIENCE MEDICAL ASSOCIATION
SIDDHA - VARMA - AYURVEDA BEST SPINAL CURE & HEALING CENTRE
நோய்களுக்கு ஏற்ப
சித்தா, வர்மா, ஆயுர்வேத முறைப்படி பாரம்பரிய
கூட்டு மருத்துவ சிகிச்சை அளிக்கப்படும்
அக்குபஞ்சர்
வலி நிவாரண சிகிச்சை
HERNIATED DISC
SLIPPED DISC
BULGING DISC
SCIATICA SPINAL STENOSIS
DEGENERATIVE DISC DISEASE
Prof. Hr. SIVAYOGI MOURIYAN
B.A., M.(Acu) M.D.(Acu)
Cell : 98404 82245
Time : 10.30 am - 12.30 am / 4.00 pm - 7.30 pm
No. 6/56, Annamalai Nagar 1st Street, West Mambalam, Chennai - 600 033.